உ

சிவமயம்.

# பஞ்சதிகாரவிளக்கம்.

---

## சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த மூலமும்,

இதற்கு

வித்துவான்-காஞ்சீபுரம்

**சபாபதிமுதலியாரியற்றிய**

பொழிப்புரையும்

திருமயிலை

**சுப்பராயஞானியாரால்**

---

புங்கத்தூர்

**ம. சபாபதிமுதலியாரது**

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

ரௌத்திரி ௵ - ஐப்பசி ௴.

பஞ்சதிகார விளக்கமென்றதனை புகல்குவன்-
பஞ்சதிகாரவிளக்கமென்றித் நூலையென்னும்- ஆறு
வது செய்யுளிற்காண்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சதிகார விளக்கம்

உரையுடன்.

பரமசிவத்தினால் நடத்தப்பட்ட சிருஷ்டி திதி சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்திய முறைமைகளைத் தெரிவிப்பதினால் இது பஞ்சதிகார விளக்கமெனப் பெயர் கூறப்பட்டது.

## பாயிரம்.

### கடவுள்வணக்கம்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

முகமதியுங்கட்கடுவுங்களவளையு.................*
முத்தரியமுகபடாத்துப்.................*
புகர்மதமாமழகளிறுங்சரமலர்க்கற்.................*
பகதருவும்பொருவில்பாதத்.................*

திசமுறுபங்கயநிதியுந்தோன்றுபணைப்...... ...*
பாற்கடலிற்சிறந்துதோன்றும்... .........*
உகலருமைங்கரவமுதையுள்ளங்குளிரப்...... ......*
பூரித்தேயுவகைபூப்பாம்..... ..... ......*

(இதன்பொருள்)

முகமாகிய சந்திரனும் கண்ணாகியவிஷமும் கண்டமாகியசங்கநிதியுமுத்தரீயமென்னும்முகபடாமணிந்த தனமாகிய புகர்முகமுள்ள இளமைசங்கியமதத்தபெரிய யானையும் திருக்கரமலராகியகற்பகதருவும் ஒப்பில்லாத திருவடியாகிய விளங்குகின்ற பதுமநிதியும் தோன்றியபராசத்தியென்னுந் திருப்பாற்கடலிற் சிறந்துதோன்றிய கெடுதலில்லாதஐங்கரமுள்ள விநாயகமூர்த்தியாகிய அமுர்தத்தை எமதுள்ளங்குளிரும்படிபூரித்துச் சந்தோஷித்தையுடைவாம் - என்க.

பராசத்தியைப் பாற்கடலென உருவகப்படுத்திக்கூறினமையின்-முன்பாற்கடலினிடத்துச் சந்திரன்விஷம்- சங்கநிதி - பதுமநிதி - யானை-கற்பகம்-அமிர்தம் -என்னுமிவைகள் தோன்றின முறைமையைப்போலஈண்டுக்கூறியபாற்கடலினிடத்தும்அப்பொருள்கள் தோன்றுகின்றனவென்றுகூறினார்.

கண்டம் - சங்கம்போல்வதாதலின் - அதனைச்சங்கநிதியென்றும் - பாதம் - பதுமம்போல்வதாதலின் - அதனைப் பதுமநிதியென்றும் - தனம்யானைமத்தகம்போல்வதாதலின் - அதனை யானையென்றுங்கூறினர்-இவைபண்புவமம் - திருக்கரமும் - திருவடியும் - அன்பர்களுக்குவரம் அருள்வனவாதலின் கற்பகம் பதுமநிதியென்றும்-விநாயகர் - சிந்திக்கும் அடியார்களுக்கு -சன்னமரணங்களை நீக்குகின்றவராதலின் - அவனைஅமுதமென்றும்-பராசத்தியார் தொண்டர்களுக்கு -இகமுத்தரார்த்த-பரபோகங்களைத்தருகின்றவராதலின் அவளைப்பாற்கடலென்றுங்கூறினர்-இவைதொழிலுவமம்-தனம்- உவம ஆகுபெயர்.

## நடேசர்துதி.

### எண்சீர்க்கழிநெடில்

பெருங்கருணைக்கடறதும்பித் திருவுருவந்தரித்துப்,
பேசருமாசான்மறைந்தவாருயிரையெடுத்தே *
இருபுகழ்சேர்விஞ்ஞானகலராதிமூவ ..... .. *
ரொனத்தொகுத்துத் தனுவாதியீந்தும் மாயையினில், வருஞ்சகலர்க்கிருவினையொப்பாக்கிமலபாகம் -வருவித்துத்திருவடிக்கீழ்வைப்பான்மன்றதனு.ளருங்கருணைபைத்தொழிற்கூத்தாடுமிறையடிகளககமலத்தொளிவளரக்கருதியிருத்திடுவாம்...*

(இ-ள்) உயிர்களை முத்தியில்விட வேண்டுமென்று நிறைந்தகடல்போன்றபெரிய கருணையாகிய திருமேனிகொண்டு சொல்லுதற்கரிய ஆணவமலத்தினால் மறைபட்டிருந்த உயிர்களை அதினின்றெடுத்துப் பெரியபுகழ்சேர்ந்த விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனமூன்றுவகையாகத் தொகுத்துத் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்தருளி அம் மூன்றுவகை யுயிர்களுள் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களுடன் தோன்றிய சகலர்களுக்கு நல்வினைதீவினையென்னும் இருவினைகளைச் சமப்படுத்தி மலபரிபாகம் வருவித்துத் தமது திருவடியின்கீழ்வைத்தருளுகின்றவரும் சிற்சபையினிடத்து அரிதாகிய திருவருளினால் பஞ்சகிர்த்திய நடனஞ்செய்தருளுகின்றவருமாகிய நடேசமூர்த்தியின் திருவடிகளை எமது இருதயமாகியதாமரைமலரில் ஒளியுடன்வீற்றிருக்கும்படி தியானஞ்செய்திருத்துவாம் - என்க.

## சிவகாமியம்மை துதி.

மலர்விளையுங்கதிரொளியுமயிருடலுமணியின் ...*
வளர்தேசுமுருநிழலுமலிபொருளோடுணையு...*
நிலவுதல்போனிட்களத்தைப்பிரியாதுமருவி ...*
நிகழ்சகளத்தப்பதிக்குநிறைமனையாய்மன்னி. *

யுலகுயிர்மைந்தர்கள்பிறவிப்பசிகெடவெந்நாளு *
மோவாதானந்தவமுதூட்டியவ்வீட்டிருத்துந் *
திலகநுதற்சிவகாமசுந்தரியார்பாதச்...... .......*
செங்கமலந்தலைமீதிற்றிகழுறவைத்திடுவாம்... *

(இ-ள்)மலரும்வாசனையும் சூரியனும் ஒளியும் உடலும் உயிரும் ரத்தினமும் ஒளியும் உடலும்சாயையும் சொல்லும் பொருளும்பிறிவில்லாமல்விளங்குவதுபோல நிட்களசொரூபத்தைப் பிரியாமல் அபின்னசத்தியாகப்பொருந்தி - விளங்குகின்ற சகளரூபத்தில் அந்தச் சிவத்திற்குத் தேவியாய் நிலைபெற்று உலகத்திலிராநின்றஉயிர்களாகிய மைந்தர்களுக்குப்பிறவி யென்னும் பசியானதுகெட எந்நாளும் ஒழிபாத ஆனந்தவமுதூட்டி அந்தமோக்ஷவீட்டில் நிலையாயிருக்கும்படி அருள்கின்ற திலகமணிந்த நெற்றியினையுடைய சிவகாமசுந்தரியின் திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை எம்முடையசிரசின்மேல்விளங்கும்படி சூட்டிக்கொள்ளுவோம் - என்க. (ச)

### விநாயகர்துதி.

கவுட்குழிமாமதகுதிறந்தருண்மதநீர்ப்பாய்ச்சிக் *
கருதுறுமெய்ப்படியருளப்புலத்தஞ்சக்கரமா. *
நவப்பெருவித்திட்டதனிநெழுமன்பாழுளையை ३
நசைவிடயக்கிளிகணுறுக்காதவகைகாத்திங் *

துவக்களைகட்டருள்ஞானப் பயிரோற்றியென்று *
மியானெனுமானவ வேழமணுஞ்சாது துரத்தி *
யுவப்புறுமெய்ச்சிவபோகம் விளைவிக்குங்களிற்றை
யுளமவுனக்கூடத்திற்பிறிவறவைத்திடுவாம் ...*

(இ-ள்) கவட்குழியாகியபெரியமதகினைத்திற
ந்து திருவருளாகிய மதநீரைப்பாய்ச்சித் தியாநி
க்காநின்ற உண்மையடியார்களுடைய இருதயமா
கியநிலத்தில்பஞ்சாக்ஷரமாகிய புதியபெருவிதை
யைநாட்டி அதில்நின்றுமேலெழுந்த அன்பாகி
யமுளையைவிருப்பமுள்ள விடயமாகிய கிள்ளைக
ள்நறுக்காதவண்ணங்காத்து அவமாகிய பயனில்
முயற்சியென்னுங் களைகளைப்பறித்து அருளாகி
யஞானப்பயிரை விருத்திசெய்து யான்எனதெ
ன்கிற தற்போதமாகிய யானையானது,என் றும்அந்
தப்பயிரினிடத்துச் சேராதவண்ணம்துரத்தி ஆன
ந்தமாகிய மிகுந்த சிவபோகமென்னும் பயிரை
விளைவிக்காநின்ற யானையைஉள்ளத்தில் நிலைத்த
மௌனநிலையாகிய கூடத்திலே நீங்குதலில்லாம
விருக்கும்படி வைப்பாம்—எனக. (ரு)

இதன்தாத்பரியம்

பேரருளால் குருமூர்த்தமா யெழுந்தருளி
மெய்யடியாருக்குப் பஞ்சாக்ஷரோப தேசஞ்செ

ய்து நாமரூபமாகிய விஷயங்கள்வந்து தாக்காது நிஷ்டைகூடவைத்து ஞானத்தை விர்த்தி செய்து யானெனதென்னுந் தற்போதத்தைநீக்கிச் சிவபேர் கந் தந்தருளுகின்ற ஞானமாகிய யானைமுகமுள்ள விநாயகமூர்த்தியைத்தியானிக்கிறேம் என்பதாம்.

விநாயகர் திருவவதாரஞ் செய்தபோது பரமசி வம் அவ்விநாயகனைநோக்கித் தேவர்கள்முதலியயா வரும் யாதொரு சுபகாரியங்கள்செய்யத்தொடங்கு வார்களானால் உன்னைத் துதிசெய்து தொடங்குவ ராயின் அக்காரியம் இனிது நிறைவேறுமென்று ஆக்கியாபித்தருளிய முறைமைபற்றி முன்னந்து திசெய்து சுவாமி அம்மை விநாயகர் சுப்பிரமணி யசுவாமி என்னுங்கிரமங்கொண்டு மீட்டும் விநாய கனைத்துதிசெய்வது சைவசமய சம்பிரதாயம்.

### சுப்பிரமணியசுவாமி துதி

கனைகடலின்முடிமீதிற் சுடர்விடுஞாயிறுபோற் *
கடிநீலக்கலபமயிற்றுரகமிசைத்தோன்றி ... *
வனசரர்தந் தருண்மானுங்கடவுளர்கோனுதவு *
மாதவபானையுமிருபான் மன்னுறவெந்நாளு *
நினையடியார்பவநோயிற் சாராமற்காத்து... ;... *
நிறைசுகபூரணவா ரிகுறைவறவேயுதவும், புனை

மலர்நீபத்தொடையானூபுரமாமுளரிப், பொன்னடியென்சென்னியிலும்புந்தியிலும் வைப்பாம்.

(இ-ள்) ஒலிக்காநின்ற சமுத்திரத்தின் முகட்டினிடத்தில் ஒளிவிட்டுதயமாகாநின்ற சூரியனைப்போல-விளங்குகின்றநீலநிறம்பொருந்திய தோகையையுடைய மயில்வாகனத்தின்மேல் வேடர்கள்கொடுத்த தவமுள்ளவள்ளியம்மையும் தேவேந்திரன்தந்த பெரியதவமுள்ள தெய்வயானையம்மையும் இருபக்கத்திலும் நிலைபெற்றிருக்கும்படிதோன்றி எந்நாளுஞ்சிந்திக்காநின்ற அடியவர்கள் பிறவிநோயிற்சாராமற்காத்து நிறைந்த பூரணமாகிய சுகவெள்ளத்தைக் குறைவற அருளிச்செய்கின்ற கடப்பம் பூமாலையணிந்த சுப்பிரமணியசுவாமியினுடைய நூபுரமணிந்த செந்தாமரை மலர்போன்ற பொலிவினையுடைய திருவடிகளை எம்முடைய சிரசிலும் இருதயத்திலும் வைப்பாம்-என்க. (௯)

தோன்றிக்காத்துஉதவும் நீபத்தொடையான் என முடிக்க துரகம் என்பதனைப்பரியெனக்கொண்டு அப்பரியைவாகனமென்று கொள்க. இதனை ஆடும்பரிவேலணிசேவலெனஎன்பதனானு முணர்க

வள்ளி தெய்வயானை யென்னும் - இவ்விரண்டு நாச்சிமார்களும் முன்னந் தவஞ்செய்து

சுப்பிரமணியக்கடவுள் திருமணங்கொள்ளப் பெ
ற்றுக்கொண்டவர்க ளாதலால் - மாதவயானையென்
றார் . இதனால் வனசரர்தந்தருள் மான் என்றவிட
த்தும் மாதவமான் எனக்கூட்டிப் பொருள்கூறப்
பட்டது. இங்ஙனமன்றி வனசரர்தவப் பயனால்
பெற்றமான் இந்திரன் தவப்பயனால் பெற்றயானை
எனக் கூறினும் அமையும், சத்தியுடன் சேர்தலின்
றிச் சிவத்துக்குயாதொரு கிருத்தியமும் நடவாதா
கையால் வனசரர்தந்த மானும் கடவுளர்கோனுத
வும் யானையுமிருபான்மன்னுறத் தோன்றி அடியா
ர்பவநோய் சாராமற்காத்து என்றார். இதனைச் சிவ
மெனும் பொருளும் ஆதிசத்தியொடுசேரி லெத்
தொழிலும்வல்லதாம். என்பதனானும், கனைகடலி
ன்முடிமீது சுடர்விடுஞாயிறுபோற்றோன்றி என்
பதனை, உலகமுவப்ப வலனேர்புதிரிதரு பலர்புக
ழ்ஞாயிறு கடற்கண்டா அங்கோவறவிமைக்குஞ்சே
ண்விளங்கவிரொளி என்பதனானுமுணர்க-யானை
யும் மன்னுறவென்றதனைச் சூரியனுங் கிரணமும்
போலக் கொள்க. (எ)

## குருவணக்கம்.

ஐந்தொழிலினுலகற்றி யனுக்கிரகமொன்று ...*
மருளுடனேகொண்டுபர திருஞானவடிவாய், *

வந்தருளித்தீவகத்தாற்பறவையகப்படுத்து... ... *
மாறதும்போனாயேனைவழியடிமைகொண்டு ...*
சிந்தைதனிற்சிவஞானப் பேரொளியைக்காட்டித் *
திரிமலவல்லிருடுரந்து சிற்சுகத்தேவைக்கும் *
நந்துலவுநதிபுடைசூழ்முதுகிரிவாழ்குமர... ...*
நாயகனைத்தூயவுளத்தேமிகவைத்திடுவாம் ...*

(இ-ள்) பஞ்ச கிருத்தியங்களுக்குள் நான்கு கிருத்தியங்களை நீக்கி அநுக்கிரக மென்கிற ஒருகிருத்தியத்தை அருளுடனே கொண்டுதிருப்பரஞானவடிவான குருமூர்த்தமாயெழுந்தருளிப் பார்வையினால்பக்ஷி முதலிய மிருகங்களைவேடர் அகப்படுத்துமாறும்போலநாயேனைவழியடிமை கொண்டு அடியேன் சிந்தையில் சிவஞானமாகிய பெரிய சோதியைக் காட்டிமும்மல மாகிய வலிய இருளைத்துரந்து ஞானசுகத்தில் வைத்தருளிய-சங்கங்களுரும்படியான மணிமுத்தாநதி புடைசூழ்ந்த விருத்தாசலத்தில் வீற்றிருக்கும் குமாரதேவ சுவாமிகளை அடியேனது பரிசுத்தமான உள்ளத்தில் எந்நாளும் வீற்றிருக்கும்படி எழுந்தருளச் செய்வாம்.-என்க.

(அ)

பஞ்ச கிருத்தியங்களை நடத்தும் பரமசிவமேகாருணியத்தினால் மானிடச் சட்டை சாத்திக்

குருமூர்த்தமா யெழுந்தருளிய தென்பார். ஐந்தொழிலில்றா லீற்றியனுக்கிரகமொன்று மருளுடனே. கொண்டு பரதிரு ஞானவடிவாய் வந்தருளி யென்றும் குருமூர்த்தமா யெழுந்தளின அவசரத்தில் பக்குவாத்துமாக்களுக்கு ஞானோபதேசஞ் செய்தருளி ஆணவமலத்தைப் போக்கிப் பேரின்பத்தை அனுக்கிரகஞ்செய்யுந் தன்மையொன்றனையே கொண்டிருந்தமையினால் அனுக்கிரகமொன்று மருளுடனே கொண்டென்றும் திருவருளால் சத்திநிபாதம் பதிந்தபோதே சித்தசுத்தி உண்டாயிருப்பது மன்றி ஞானாசாரியர் கிருபையினால் மலரகிதமாயிருப்பதாதலாலும் தூயஉளமென்றுங்கூறினர். பார்வையாவது வேடர்வளர்த்துவைத்துக்கொண்டிருக்கும் பக்ஷி முதலியவை.

## அவையடக்கம்.

கருவிகளோராறுஞ் சடமாகுஞ் சீவன்.... ...*
கருத்துறுதற்செயலாமொன்றறியா திங்கிவற்றை*
மருவியந்தச்சடசித்தோரிரண்டிற்குந்தொழிலு .*
மன்னறிவுந்தன்னருளால் வருவிப்பனிறைவன் *
புனையறவாகையினாலவ் விறையருள்கொண்டடியே
ன், புகல்குவன் பஞ்சதிகாரவிளக்கமென்றிந்நூலை
ப்- பரவுமோர்கொள்ளுவரெள்ளளவுமிலறிவன்
பணியெனவே யெச்செயலும்பரஞ்செயலென்
றுணர்வார்... ......................... ........................*

(இ ள்) முப்பத்தாறுதத்துவமும் சடமாகும் - சிவன்தன்செயலாய் ஒன்றையும்அறியாது பரமசிவம் இவைகளைப்பொருந்தி அந்தச்சடசித்துகளிரண்டிற்கும் தொழிலும் அறிவும் குற்றமற்றதன்னருளால் வருவிக்கும் ஆகையால் அடியேன்பரமசிவத்தினருளினால் பஞ்சதிகாரவிளக்க மென்னும்இந்நூலைச்சொல்லுகின்றேன் அந்தப் பரமசிவத்தைத்துதிக்கின்றவர்கள் எல்லாச்செயலும் சிவன்செயலென்று உணர்கின்றமையால் இதுவுஞ்சிவன் செயலேயென்று ஏற்றுக்கொள்ளுவார்களே அல்லாமலிகழ்ச்சி செய்யார்கள் -என்க- எல்லாஞ்சிவன்செயலாகக் கண்டபெரியோர்கள் இந்நூலுஞ்சிவன்செயலால் இயன்றதென் ஏற்றுக்கொள்வார்களென்பது கருத்து. (௬)

(நூல்.)

திருவளருமொருவனொரு தொழில்புரியினதுதான்
திகழ்தருதன்பயனயலார் பயனுடனப்பயனைக்*
கருதிவருமவையுட்டன்பயன் மும்மைத்தாகுங்...*
கழறுமிடத்திடரகலிசுகமுறுதல்புகழை ...*
மருவுதலாய்வருமயலார்பயனருளைக்கருதி...... *
வத்திடுமப்பயன் விளையாட்டாகிவருமிவையுண்*
ணிருமலனைந்தொழில்புரிதறன்பயனேபிறர்த
னேர்பயனேவப்பயனேரினையுமிடத்தெளிலே.*

(இ·ள்.) சிறப்புமிகுந்த ஒருவன் ஒருதொ

ழிலைச்செய்யுமிடத்து அந்தத்தொழிலானது தன்பயனையும் அயலார்பயனையும் அவமாகியபயனையும் கருதிவரும் அம்மூன்றினுள்தன்பயனைச் சொல்லுமிடத்து-இடர்நீங்குதல் சுகமடைதல் புகழ்பொருந்துதல் எனமூன்றுவகையாகும். அயலார்பயன் அருளைக்கருதிவந்திடும்- அவமாகிய பயன் விளையாட்டாய்வரும். இவற்றுள் பரமசிவம் பஞ்சகிர்த்தியஞ்செய்குதல் நினையுமிடத்துத்தன்பயனோ அல்லது பிறர்பயனோ அவமாகிய பயனோ என்றால்- என்க.

மலரகிதனாகையினாலானந்தமயனாய்... ....... ...*
மன்னுறலாலொப்பார்மிக்கிலியாய்மன்னுறலால்,
நிலவுமிடரகலுதலுஞ்சுகப்பேறும்புகழும்··· ...*
நேர்தரவேண்டாமையினேதன்பயனன்றாகு *
மிலகருள்பேரறிவுடையனாதலினால் விளையாட்-டெ
ண்ணியொருதொழில்புரியானாதலினப்பயனன்,
றுலகுயிர்மேல்வைத்திடுபேரருளாலிங்கிறைவ ...*
னாறுதொழில்செய்குவனிதைநீபிறர்பயனென்
றுணரோ.......................................*

(இ-ள்.) பரமசிவன் மலரகிதனாகையாலும் ஆனந்தமயனாய் நிலைபெற் றிருப்பதினாலும் ஒப்பாரும் மிக்காருமில்லாதவனாய்ப் பொருந்துதலாலும் வி

ளங்குகின்ற இடர்நீங்குதலும் சுகமடைதலும் புக
ழ் பொருந்துதலும் தனக்குநேரும்படி விரும்பா
தவனாகையாலும் தன்பயனல்லவாகும் -பிறனொருகுறி
யாநின்றஅருளும் பேரறிவும் உடையனாகையால்
விளையாட்டைக்கருதி யொருதொழிலுஞ் செய்ப
வனல்லன் ஆனதால் அவமாகியபயனுமல்ல- உலக
த்துயிர்மேல் வைத்திடும் பேரருளாலிறைவன் ப
ஞ்சகிர்த்தியங்களைச் செய்வன்ஆதலின் இதனைமாண
வகனேபிறர்பயனென்று கருதுவாயாக - என்க. ௰)

ஆருயிர்கட்கிறைதொழிலாலென்பயனிங்கென்னி. *
லவ்வுயிர்கட்கீரறிவுண்டதுவிடயவறிவுஞ்.....*
சோர்வறுநற்சொரூபவறிவெனவுமவைதம்மைத் *
துகளிருகூறுய்மூடிஞ்சொல்லரிதாய்நின்றே *
யேர்விடயாவாரகதற் சொரூபாவாரகமென் ..*
றிவ்விருளாலவ்வுயிர்களெண்ணவருந்தமையுர்.*
தேர்வருமவ்விறைவனையுஞ்சிறிதேனுமறியாச் ...*
செய்திதனக்குளாதருமோர்திட்டாந்தங்கேளா*

(இ-ள்.) நிறைந்த உயிர்களுக்குப் பரமசிவத்
தினுடைய தொழிலால் என்னபயனென்றால் அவ்
வுயிர்கட்கு விஷய அறிவென்றும் சோர்வற்றநல்ல
சொரூப அறிவென்றும் இரண்டுவகையறிவுண்டு
அந்த இரண்டறிவையும் ஆணவமலமானது வி

டைய ஆவாரகமென்றும் நல்லசொரூப ஆவாரக
மென்றும் இரண்டுகூறாகிச் சொல்லுதற்கரிதாய்நின்
றுமறைக்கும் இந்தவிருளினால் அவ்வுயிர்கள் கருத
வருகின்ற தம்மையும்-தெரிதற்கரிய அந்தப்பரமசி
வத்தையுஞ்சிறிதேனும் அறியாத - இந்தச்செய்திக்
குச் சொல்லுகின்ற ஒருதிருஷ்டாந்தங்கேள்-என்க.

உறுமருளன்விடத்தான்மூர்ச்சித்தயர்வுற்றிடவங் *
கொருவன்மருந்தாலருள்கொண்டம்மூர்ச்சைநீக்
கிச், செறிமருளுக்கவுடதமுங்கொடுத்திதையுந்தீர்த்
துத்- திகழ்சுகமுற்றிடவைக்குந்திறமதுவேபோ
ல, அறையிருளிற்செறிவுயிர்கட் குடன்முதலா மா
யை-புதனிடைதந்திருள்விடயாவாரகமுன்னீக்கி,
மறைகுருவாலனுபவத்தாற் சொரூபா வாரகமு *
மாற்றியின்பந்தருமிறைவன்மாதொழிலாலறியே

(இ-ள்.) பொருந்திய பித்தமயக்குள்ளவன் வி
ஷத்தினாலே மூர்ச்சித்துச் சோபம்பொருந்தியிரு
க்கும் போது அங்கொருவன் வந்து அருளையுட்
கொண்டு அவுஷதத்தினால்அம்மூர்ச்சையைநீக்கிமு
ன்னமிருந்தபித்தமயக்கத்திற்குந் தகுதியான அவு
ஷதங்கொடுத்து அம்மயக்கத்தையுந்தீர்த்துச் சுகம்
பொருந்தியிருக்கும்படிசெய்யுந் தன்மைபோலச்
சொல்லுகின்ற அவ்விருளிற் பொருந்தியிருக்கும்
உயிர்களுக்குத்தனுகரணபுவனபோகங்களை மாயை

யினிடமாகக்கொடுத்து இருளாகிய விடயவாவார
கத்தை முன்னம்நீக்கிச் சுருதியினாலுங் குருவினாலு
ம் அனுபவத்தினாலும் சொரூபவாவாரகத்தையுமா
ற்றிச் சுகத்தைத்தந்தருள்வன் பஞ்ச கிர்த்தியத்தின
லென்று அறிவாயாக என்க. (௰௨)

உயிர்களுமோர்படித்தவைமூடாணவமோர்தன்மை
த்-துறுமிறையகன்பக்கபாதமிலியானற் ... *
செயிரறுவிஞ்ஞான கலர்க்குடலாதிதந்த.........*
செய்தியின்மற்றிருவர்க்குஞ்செய்தாலெஃனென்
னி,னியல்பொடுகண்களுமவைமூடும்படலந்தானு*
மிருந்திடவப்பிணிகுணகுற்றங்களை நன்கறிவோ
ன்,றயவொடுநன்மணிமருந்தாசியினால் நீக்கிடுமால்.*
சாற்றியமூவகையாக்கித்தணிக்குமலமிறையே-*

(இ-ள்) உயிர்களும் ஒருதன்மையாயிருப்பது அவைகளை மறைக்காநின்றஆணவஇருளானதுமொருதன்மையதாயிருக்கின்றது அவ்வாறிருக்கப்பரமசிவம் பக்ஷபாதமில்லாதவரானால் குற்றமற்றவிஞ்ஞானகலர்களுக்குஉடல் முதலானவைகளைத்தந்த தன்மையைப்போல் பிரளயாகலர் சகலர்என்னு மிவ்விருவர்களுக்குஞ்செய்தால் என்னகுற்றமெனவினவுவையாயின் இயல்பானகண்களும் அவற்றை மூடப்பட்ட படலமுமிருக்குமானால் இயல்பானகண்களைவிட்டு அந்தப்படலமாகிய பிணியின்கு குற்றங்களை நன்றறிகின்றவன் தயையினால்மன

னாலும் நல்லமருந்தினாலும் ஊசியினாலும் படலத்தைநீக்குவான் அதுபோல உயிர்களைச்சொல்லுகின்ற மூன்றுவகையாகச்செய்து பரமசிவம் ஆணவவிருளை நீக்கும்.

படலத்தின் குணகுற்றங்களையறிந்து நீக்கத்தொடங்குகின்றவன் மணியினால் தீர்க்கத்தக்கபடலத்தை மற்றைய இரண்டினாலாவது மருந்தினால்தீர்க்கத்தக்கதை மற்றையஇரண்டினாலாவது ஊசியினால்தீர்க்கத்தக்கதைமற்றைய இரண்டினாலாவதுதீர்க்கக்கருதாது - அவற்றவற்றிற்குத்தக்க சிச்சைசெய்து தீர்க்கவேகருதுவன். அதுபோல உயிர்கள் மூன்றுவகைய யிருக்குந் தன்மையைப்பரமசிவம்உணர்ந்ததாகையால்அவைகளுக்குத்தக்க முறைமைப்படி ஆணவ மலத்தை நீக்குமென்றறிக என்க.

விஞ்ஞானகலர் ஆணவமென்னும்ஒருமலமும்- பிரளயாகலர் ஆணவங்கன்மமென்னும் இரண்டுமலமும் - சகலர்ஆணவம்கன்மம் மாயையென்னும் மூன்றுமலங்களையும் உடையவர்கள் - இவைகளைக் குறித்து இன்னமும்விண்டெழுதப்புகின்பெருகும்

ஐந்தொழிலாவனவேதென்றிடிலவைதான்சிருட்டி*
யாலதிதிசங்காரந்திரோபாவத்துடனே......*

வந்திலகுமனுக்கிரகமென்றுமச்சிருட்டி...... *
மாயையினிற்றனுகரணபுவனமுடன்போகந் *
தந்திடலாந்தனுவெண்பத்தொருநான்கொடுற்ற *
தகுநூறாயிரபேதஞ்சாற்றியவக்கரணம்... ...*
நந்துமுயிர்க்கரணம்வித்தியாகரணமுடனே...*
நற்சிவமாகரணமெனநண்ணுறுமிங்கிவையுள். *

இதுபஞ்சகிருத்திய மிவையெனவுணர்த்துகின்றது.

(இ-ள்) பஞ்சகிர்த்தியங்களானவை யெவையென்னில் அவைகள் சிருஷ்டிஸ்திதி சங்காரம் திரோபவம் இவைகளுடன் முறையாகவந்துவிளங்குகின்ற அனுக்கிரகம் என்றுசொல்லப்படும். அவைகளுள் சிருஷ்டியாவது மாயையினாலே தனுகரணம் புவனம் போகம் என்பவைகளைக் கொடுப்பதாம்- இவைகளுக்குள் தனுவானது எண்பத்துநான்குலக்ஷபேதமாகச் சொல்லப்படும் - கரணமானது சீவகரணம் வித்தியாகரணம் சிவகரணமெனப் பொருந்தும் - இவைகளுக்குள்-என்க. (௰௫)

சீவனிடைக்கரணம்விடயாதிகளைத்தேருந்..... *
திறமதுவாம்வித்தியாகரணத்தின் முறைசெப்பி
லோவறும்போகந்துய்ப்பத்திரிகாலமாயு...... ...*
முறும்போகம்வினைகட்டிறவனாவதாயும்...... *

தாவிலுயிர்க்குக்கிரியையறிவிச்சையெழுப்பும் ✻
சார்பாயும்விடயத்திற்றங்குகறங்கொப்ப...... ✻
மேவியியக்குதலாயும்விடயந்தானென்ன ... ... ✻
வேறறமால்தரலாயும்விளங்கு றுமாலென்னே ✻

இது மேற்கூறிய கரணங்களின் செய்கைகளை வகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) சிவனிடத்துண்டாகிய கரணமானது விஷயாதிகளையறியுந் தன்மையை யுடையதாம்-வித்தியாகரணத்தின் முறைமையைச் சொல்லுமிடத்து ஒழிவில்லாதபோகங்களைச் சீவன்அனுபவிக்க மூன்றுகாலமாயும் பொருந்தியபோகங்களைவினைகளுக்கு கூடாகஅளவிடுவதாயும்கெடுதலில்லாத வுயிர்கட்குக்கிரியை- யறிவு- இச்சை -என்னும் இம்மூன்றையும் எழுப்புகின்ற சார்பாயும் விஷயத்தில் காற்றூடிக் கொப்பாக இயங்கச் செய்வதாயும் விஷயமென்றுந் தானென்றுஞ்சொல்கின்ற வேற்றுமைநீங்கமயக்கத்தைத் தருவதாயும்விளங்கும்- என்க. (௰௬)

வித்தியாதத்துவமாவது-காலம் - நியதி- கலை வித்தை - ராகம்- புருடன்- மாயை; என வேழாம்.

மன்னியநற்சிவகரணம்வித்தியாகரணத்தை...... ✻
மருவிநடத்தும்புவனமிருநூற்றிருபானுன்,... ✻

ரூன்னூறுபோகஞ்சிவிகைகவிகைபரிகரிதே......௦
ருயர்கலையாதிகள்கந்தஞ்சடுரசமாந்தொகுதி *
துன்னூருபல்லுருவங்கள்வனிதாதிபரிசந் ...... *
தோற்றிடுகீதாதிகளாமற்றிவை யுட்டனுவைப் *
பன்னவுறுகரணத்தையானென்னவொண்புவனம் *
பகர்போகமெனவாருயிர்கருதவைத்தே *

இது சிவகரணத்தின்செய்கைகூறுகின்றது.

(இ-ள்) பொருந்திய நல்ல சிவகரணமானது வித்தியாகரணத்தைப் பொருந்திமருவி நடத்தும் புவனம் இருநூற்றிருபத்துநாலு என்பவைகளாம் கருதுகின்ற போகமானது சிவிகைகுடை குதிரை யானை தேர் உயர்ந்தவஸ்திர முதலானவைகளும்வாசனைதிரவியம் அறுசுவைவர்க்கம்- பொருந்திய பலவுருவங்கள் மாதர்முதலாகிய பரிசங்களும் சொல்லுகின்ற கீதமுதலானவைகளுமாம் இவைகளுக்குள் சரீரத்தையும் சொல்லுகின்ற கரணத்தையும் யானென்றும் புவனபோகத்தை யெனதென்றும் உயிர்கள் கருதும்படிவைத்து-என்க. (௪௫)

சுகதுன்பந்துய்ப்பித்தறிதியாகுமுயிர்க்குத்......*
தோற்றியவெல்லாமொடுக்கல்சொல்லுறுசங்கார
மிருசிருட்டிதிதிசங்காரத் துழன்றுமிடணை......*
வெறுக்காதுருசிப்பித்தலவிடப்புதிரோபாவம் *

பகர்பொருளைப்பகுத்தறிவித்திடுதலநுக்கிரகம் *
பரம்பரனைந்தொழிலாலேயுறுசடசித்தவைக்கும்
மகன்றொழிலுமறிவுமுதித்திடுமிதனாலன்றே......*
புகிலுமிந்தவனசையிலணுவசையுமெனுமால்.

இது - உடலோடுகூடியிருக்கையில் உயிர்களிடத்து நிகழும்பஞ்சகிருத்திய மிவையெனக் கூறுகின்றது.

(இ-ள்) சுகங்களையும் துன்பங்களையும் அநுபவிக்கச்செய்தல் திதியாம் உயிர்களால்காணப்பட்டவைகளையெல்லாம் ஒடுக்குதல் சொல்லுகின்றசங்காரமாம் மிகுந்தசிருஷ்டி ஸ்திதிசங்காரம் என்பவைகளுக்குள் பலநாள்உழன்றும் அந்தஇடனாவெறுக்காமல் ருசிக்கும்படிசெய்தல் சொல்லுகின்றதிரோபவமாம் இவ்வாறுசொல்லுகின்ற அநித்தியமும் நித்தியமுமாகிய பொருளைப்பகுத்துத் தெரிவிப்பது அநுக்கிரகமாம் தொடர்ச்சியுள்ளசடம்சித்து என்பவைகளுக்கும் விசாலமாகியதொழிலும் அறிவும்தோன்றும் இதனாலல்லவா எல்லாம்பரமசிவம் அசைந்தால் அணுவும்அசையுமென்று வேதமுதலியசாஸ்திரங்கள் சொல்லுகின்றது-என்கயிகு

அவ்விறைவனிவ்வகையைந்தொழில்புரிவதாரு...*
லவனேயெவ்வாறறிவதெனிலனுமானத்தாலே...*

செவ்விதின்முன்னறிவித்தங்கவனடியைச்சேருந் *
திகழுறுநல்விரகுமினிச்செப்புதுநீகேட்டி... *
தவ்வலருஞ்சந்திரசூரியருடுவிண்மேகஞ்... ... *
சாகரமாமலைதீகால்சரவசரபேத...... .... ... *
மொவ்வவுருதுறுபஞ்சபூதமுமற்றுளவு ... ... *
முயிராலுண்டாக்குதல்கூடாதமுறையானும். *

இதுகடவுளுண்டென்பதறிவிக்கின்றது.

(இ-ள்) அந்தப்பரமசிவம் இவ்வாறு பஞ்சகிர்த்தியஞ்செய்யுமானல் அதனைஎவ்வாறு அறியலாமெனில் அநுமானப்பிரமாணத்தினும் செவ்வையாகமுன்னே அறிவித்து அந்தப்பரமசிவத்தின் திருவடியைச் சேரும்படியான நல்லவுபாயத்தையும் இனிச்சொல்லுகிறோம்நீகேட்பாயாக -கெடுதற்கரியசந்திரசூரியர்கள்நக்ஷத்திரங்கள் ஆகாயம்மேகம் சமுத்திரங்கள் பெரியமலைகள் அக்கினிகாடு சராசரவுயிர்கள் ஒன்றுக்கொன்றுஒவ்வாதுபொருந்திய பஞ்சபூதங்களு மற்றுமுள்ள எவைகளும் சீவனல் உண்டாக்கக்கூடாத முறைமையினாலும் —என்க.

சந்திரசூரியருடுவந்தரமதிலெந்நாளுந் ... ... . *
தத்தமுறைவழுவாதுகொட்புறுதலானுங்...... *
சுந்தரம்வாரியின்மொண்டேபொழிசருதலானுங் *
கடறன்னெல்லையமீறிக்கடவாமையானுஞ் *

செந்தழன்மாருதமீறிச்செலியாமையானுந் ... *
திகழ்காலம்பல்விதமாய்ச்சேர்ந்துறுதலானு *
மந்திரத்தாற்பாம்பாதிவசமாகையானு... ... ...*
மன்னுயிர்பாரம்பரைமாறாதுறைதலானும்...*

(இ-ள்)• சந்திர சூரியர்களும் நக்ஷத்திரங்களும் ஆகாசத்தின்மேலெந்நாளும் தத்தமுறைவழுவாமல் சுழன்றுவருகின்றதினாலும் மேகமானது சமுத்திரத்தில் நீரைமொண்டு பூமியில்பொழிவதினாலும்-சமுத்திரமானது தன்னெல்லையை மீறிக்கடவாமலிருப்பதினாலும் அக்கினியுங் காற்றும் அளவுமீறியுண்டாகாமையினாலும் விளங்குகின்ற காலம் பலவிதமாய்ச்சேர்ந்து பொருந்துவதினாலும் மந்திரத்தினால் பாம்புமுதலான ஜெந்துகள்வசமாதலினாலும் நிலைபெற்றவுயிர்கள் பரம்பரை மாறாமல் பொருந்தியிருப்பதினாலும்—என்க. (௰௮)

செந்நீரில்வெண்ணீர்போய்ச்சேர்ந்தொருபான்றிங்
கட் - சிந்துதிரஞ்சிந்தாமற்பந்தமுறத்தங்கி *
யந்நீர்கண்மண்ணைதனாற்சித்திரிதன்பதுமை.....*
யாக்குதல்போலொருவரும்பண்ணாதாக்கையாகி
தந்நீர்மைகுறையாமற்றாயுதரத்திருந்து . .. [த்
தருகடப்பூசணிப்பிஞ்சுதான்பருத்துவெளியின்
மன்னீர்மைகுன்றாமற்கடமுமுடையாமல்...... *
வருவதுபோல்யோனிவழிகுழவிவரலானும் -*

(இ-ள்) உதிரத்தில் விந்துவானது போய்ச்சே
ர்ந்து பத்துமாதவரையில் சிதறுகின்ற முறைமை
யில் சிதறாமல் அந்நீர்கள்பந்தப்படும்படி தங்கிச்சி
த்திரிகனானவன் மண்ணினால் பதுமை யாக்குதல்
போல ஒருவருஞ் செய்யாமல் சரீரமாகித்தங்களு
டைய தன்மைகுறையாமல் தாயினுடைய கர்ப்பத்
தில் தங்கியிருந்து ஒருகுடத்திலிவிட்ட பூசணிப்பி
ஞ்சானது தன்தன்மைகெடாமலும் அந்தக்குடமு
டையாமலும் இயல்பாக அதற்குள்பருத்து வெளி
யில்வருவதுபோல யோனியின்வழியில் சிசு வருவ
தினாலும்—என்க. (௰௬)

ஆனைமுதலியவைகளுமாண்பெணவைகூடி ...*
லவ்வுருவவேடம்போட்டாங்குவரலானு... ...*
மூனமிலாண்பெண்கூடாதுயிர்தோன்றலானு ..*
முறும்விதைவர்க்கப்படிதாபரமெழுதலானுந்*
தீனமிலித்தியபங்கரங்கமதிற்பங்கர்... ........*
திகழுருவிலார்நோயரிவைகளிலாவடிவ... ...*
மானமிடியினர்செல்வரறிஞரறிவில்லா... ......*
ரதிபாவபுண்ணியர்களாகியுறலானும்.........*

(இ-ள்) ஆனைமுதலாகிய ஜெந்துக்களெல்லா
ம் ஆணும்பெண்ணுங்கூடினால் அந்தந்த ரூபவேட
ங்கொண்டு உற்பத்தியாவதினாலும் ஊனமில்லாதது

னும்பெண்ணுங்கூடாமலே உயிர்கள் தோன்றுவ
தினாலுங் கருதுகின்றவித்தின்வர்க்கப்படிவிருக்ஷங்
கள் முளைப்பதினாலும் கண்முதலான இந்திரியபு
ங்களுமுடையவர்களும் அவயவபங்க முடையவர்க
ளும் விளங்குகின்ற நல்ல உருவமில்லாதவர்களும்
நோயர்களும் இந்தப்பங்கங்களில்லாதவடிவமுடை
யவர்களுந்தரித்திரமுடையவர்களுஞ்செல்வமுடை
யவர்களும் அறிவுள்ளவர்களும் அறிவில்லாதவர்க
ளும்மிகுந்தபாபமுடையவர்களும் புண்ணியமுள்
ளவர்களுமாய்ப்பொருந்துவதினாலும்-என்க. ௨௰)

ஒன்பதுவாயுடனொருவாய்விட்டுடலினுறைய ...*
வுயிர்கட்குக்கூடாமையினுமொருங்கநீங்கிற் *
றன்சுயமாய்வருவிக்கக்கூடாமையானுந் .......*
தனுக்கடொறுமோர்காற்றுத்தங்கியுறலானு....*
மன்புடனாண்பிள்ளைவேண்டிற்பெண்ணுறுதலானு.*
மழகியபெண்வேண்டிலிடத்தாணுறுதலானுந் *
தென்பயிலாண்பெண்வேண்டிற்சிகண்டியுறலானு
ஞ்-சிந்தையிலெண்ணியவாறேசேராமையானும்

(இ-ள்)ஒன்பதுவழியுடன் பின்னுமொருவழி
விட்டுக்கொண்டு உயிருடலில்வாசஞ்செய்யக்கூடா
மையாலும் ஒருறுப்புநீங்கிவிட்டால்அவ்வுறுப்பை
உயிரானது தன்சுயமாக வருவித்துக் கொள்ளக்கூ

டாமையாலுஞ் சரீரங்கள்தோறும் நச்வாயுக்களை தங்கியிருப்பதினாலும் ஆண்குழந்தை பிறக்க வேண்டுமென்றுவிரும்பினால் பெண்குழந்தைபிறப்பதினாலும் பெண்குழந்தைவேண்டுமென்று விரும்பினால் ஆண்குழந்தைபிறப்பதினாலும்இவ்வாறன்றி ஆணாவது பெண்ணாவது பிறக்கவேண்டு மென்று விரும்பினால் அலிபிறப்பதினாலும் இவ்வாறுநாம் மனதிலெண்ணியபடி சேராமையாலும்—என்க()

மகவினிவேண்டாவெனவுமகவருதலானு........*
மகவுக்தாய்ப்பாலருத்தமரித்து றுதலானு ...*
பிகைசெய்தான்றனையொருவன்வெட்டுமிடத்தொ
ருவன்- விடுவித்தாள்கையினானும்விளம்புறுமற்
றொருவன்-பகைவர்தமக்கஞ்சியொளித்துறவுமவர்
கையிற் படலானுந்தாபரங்கள்பரிந்துதமைக்கா
க்குந்-தகையறிவிலாதிருந்துந்தங்கியுறலானுஞ். *
சாற்றியமுற்பிற்பிறவிதாமறியாமையினும்...*

(இ-ள்) இனிக்குழந்தை வேண்டுவதில்லையென வெண்ணியிருந்தாலுங் குழந்தை பிறப்பதினாலுங் குழந்தைபசிக்காகப் பாலையூட்டுமிடத்து அக்குழந்தையிறப்பதினாலுங் குற்றஞ்செய்தவனை ஒருவன்வெட்டும்போது மற்றொருவன்வந்துவிடுவித்து ஆளுவதினாலும் வேறொருவன் பகைவருக்கு

ப்பபந்து ஒளித்திருந்தாலும் அந்தப்பகைவர்கை யில் அகப்பட்டுக் கொள்வதினாலுந் தாபரஜெந்து கள் தங்களைக்காத் துக்கொள்ள வேண்டுமென்கிற விவேகமில்லாதிருந்தும் அறிவில்லாமல் நீடித்திரு ப்பதினாலும்முன் ஜெனனத்தையும் வரும் ஜெனன த்தையுந்தாமறியாமையாலும்—என்க. (உஉ)

இம்முறையேயளவிறந்தபேதமதாய்ச்சடமு... *
மிலங்குயிருஞ்சுதந்தரமின்றாய்நிகழ்தலானுங் *
கம்மியனாற்குயவன்கைக்கோளன்றேகாரங் ... *
கடபடமுண்டாக்கிடுமோர்காரணமேபோலச் *
செம்மைதருமருள்கோடாதிறையுயிர்கள்செய்த *
தீவினைநல்வினைக்கீடாய்ச்செறிதனுவாதிகடந் *
தம்முறையேயளித்தழிப்பனருடருவானதனா .... *
லக்கடவுளுளனெனநீமிக்கதிடத்தறியே...... *

(இ-ள்) உடலும் உயிரும் இவ்வாறு அளவிற ந்தபேதமுள்ளதாய்த்தற் சுதந்தரமில்லாமல் நிகழ்வ தினாலுங் கம்மாளன் ஆபரணங்களை உண்டாக்குவதுங் குயவன் கடங்களையுண்டாக்குவதுங் கைக்கோளன் வஸ்திரங்களை யுண்டாக்குவதுமாகிய காரணத்தை ப்போலப் பரமசிவன் திருவருளில் மாறுபடாது உயிர்கள்செய்தநல்வினைதீவினைக்கீடாகத்தனுவாதிக ளைக்கொடுத்து அம்முறையேரக்ஷித்துச்சங்கரிப்

பதுமன்றிப்பக்குவாத் மாக்களுக்கு அநுக்கிரகமு
ஞ்செய்வன் ஆகையால் அக்கடவுள் எல்லாவற்றிற்
கும்நிமித்தகாரணனாயிருக்கின்றானென்றுநீயுறுதியு
டனறிந்துகொள்ளக்கடவை—என்க. (உரு)

நன்றேநீருரைத்தனசம்மதித்தேனான்முகவ......*
னாதியர்காசிபன்விசுவாமித்திரனாதியர்க......*
ளொன்றோடொன்றொவ்வாதசமயகடவுளர்க [ணீ
ணூறுதொழில்செய்குவரென்பதென்னையதுகே
குன்றாவார்குடையிற்குவலயமுழுதாள்வோன் *
குளாகழல்சேவிதரவன்றன்றொழில்புரிவாரெனி
தென்றாரவ்வரசனதாணையைவிடவேநிகழாச் [னுந்
செய்தியின்மெய்யிறைபருளாற்செய்வரவர்தொ
ழிலே ........................................*

(இ-ள்)குருவே தேவரீர் போதித்தவை நன்
மையானவைகளே அடியேனுஞ்சம்மதித்தேன் ஆ
னால்பிரமதேவன் முதலானவர்களும் காசிபரிஷிவி
சுவாமித்திர ரிஷிமுதலானவர்களும் ஒன்றோடொ
ன்றொவ்வாதபலசமய கடவுளர்களும் மேற்சொல்
லியபஞ்சகிர்த்தியங்களைச் செய்வார்களென்றுசொ
ல்லுவதுயாதுகாரணமோ அருள்செய்யவேண்டும்-
மாணாக்கனே அதைச்சொல்லுகிறேன் நீகேட்பாயா
க -குன்றாத ஒருதடைநிழலில் இவ்வுலகமுழுவதை

டும் ஆளுகின்ற அரசனுடைய சத்திரியாநின்ற வீர கண்டையணிந்த சேவிதர்களாகிய மந்திரி முதலானவர்களும் அந்தஅரசன்செய்புந்தொழிலைச் செய்வார்களேயானாலும் இனியபூமாலையணிந்தஅவ்வரசனுடைய்ஆக்கினையையன்றி நடவாத தன்மையைப் போல மெய்ப்பொருளாகிய பரமசிவத்தினுடைய திருவருளால் மேற்கூறிய பிரமன்முதலானவர்கள்தொழில் செய்கின்றார்களென அறிந்துகொள்ளுதி— என்க. தேன் என்னுஞ்சொல் தேன் எனக்குறுகியதாகக்கொண்டுதேனிறைந்தபூமாலைதேனப்பொருள்கூறினும் அமையும். (உச)

அவ்விறைவனென்னுஞ் செய்யுள் தொடங்கி இச்செய்யுள்வரையிலொருதொடர்.

இந்த்வுலகாளிறைவன்றனையறியாச்சமைச்ச [போ
ரெண்ணுறுமற்றயலோர்தொழில்புரிவாரது
லந்தவின்றதனையறியாதயன்முதலாமவர்க... ...[ல்
லைந்தொழில்கள்சிற்சிலசெய்யாரோவிங்கென்னி
நந்துறுபல்லுயிர்கடமைமலத்தினைவிட்டெடுத்த*
நாட்டொடங்கிவீட்டிருத்துநாள்காறுமவைசெய்
பந்தவினையறிந்தருத்துமஃதல்லாவுந்தப் ... [லே
பண்ணவர்மாமுனிவர்க்கும்பல்லுவனைந்தொழி

இது பஞ்சகிருத்தியங்கள் பரமசிவத்தை ய

ன்றி வேறொருவருஞ் செய்கின்றவரில்லென்பதுகூ
றுகின்றது.

(இ-ள்) இந்தவுலகத்தையாளுகின்ற அரசனை யறியாமல் அவனுடையமந்திரி முதலாகவெண்ணுகின்ற மற்றத்தொழிலாளிகள் ஒவ்வொருதொழில் செய்வார்களேயதுபோல அந்தப்பரமசிவத்தையறியாமல் பிரமதேவன் முதலானவர்கள் பஞ்சகிர்த்தியங்களில் சிலகிர்த்தியங்களைச் செய்வாரோவென்றால் வளர்கின்றபலவுயிர்களையும் ஆணவமலத்தை விட்டெடுத்துத் தனுகரணங்களைக் கொடுத்தநாண் முதல் மோக்ஷத்திலிருத்தும் நாள்வரையில் அந்தவுயிர்கள் செய்தபந்தவினையை யறிந்துஅவைகளைக்கூட்டியுறக்கி யுபசரிப்பதுமல்லாமல் அந்தப் பிரமதேவன் முதலானமுனிவர்களுக்கும் பஞ்சகிர்த்தியங்களைச் செய்வன்—என்க. (௨௫

தனியுயர்ந்தோர்யாவர்க்குமியாவைக்குமேலோர் ※
நாயகனுண்டென்றறிவித்திட நினைக்கொண்டா
யினியவன்றன்சீரடிசேர்விரகுமுரைத்திடுது .. ※
மிதைமாருதிதயத்திற்பரிவாகக்கொள்வாய் [த்து
முனமுறைசெயைந்தொழில்போற் சூக்குமகாரணை
மூண்டதனைத்தெளிவதவன்றிருவடியைச்சேருந்
தனிவிரகிங்கதுவெதெனிற்சாற்றியவைந்தொழில

ள், சடசித்தோரிரண்டினிடை தாய்ட சூட்டாய்நி
ற்கும். ...... ...... ...... ...... ...... *

இது பரமசிவத்தின் திருவடியைச்சேரும்உபாயங்கூறுகின்றது.

(இ-ள்) மிகவுமுயர்ந்தோர்களுக்கும் மற்றுமுள்ள எல்லாப்பொருள்களுக்கும் மேலான ஒருதலைவன் உண்டென்று நாமறிவிக்க நீயதனை எற்றுக்கொண்டனை இனி அத்தலைவனுடைய சிறப்புப்பொருந்திய திருவடியைச்சேரும் உபாயமும் சொல்லுகிலேம் இதனைமாறாமல் இதயத்தில் பரிவுடன்கொள்ளக்கடவை முன்னம்சொல்லிய பஞ்சகிர்த்தியங்களைப்போலச் சூக்குமகாரணத்தும் உண்டு அதை அறிவதே அந்தத்தலைவனுடைய திருவடியைச்சேரும் உபாயமாம் சூக்குமகாரணங்களிலும் உண்டென்பதெதுவென்றால் ஈண்டுச்சொல்லிய பஞ்சகிர்த்தியங்களுஞ் சடம் சித்து என்று சொல்கின்ற இரண்டினிடத்தும் இரண்டுபிரிவாய்நடக்கும்—என்க.

சடமத்தனிற்சிருட்டிதிதிசங்காரதிகழுந் ... ... *
தருமுயிரிற்றிரோபாவமனுக்கிரகத்தங்கும் ... *
திடமுறுமத்திதியிரண்டாஞ் சுகதுன்ப மருத்துஞ்
செப்பிடினம்முறைபாற் செய்தொழிலாறுளவ
யுட்படிதருதற்சிருட்டியினிற்சுகமருத்துந்திதியிற்
பகருமனுக்கிரகத்திற்பன்னவுறுமுயிர்க்குக் *
கடிதலிவின்பாந்துன்பத்திதிசங்காரத்திற் ... ... *
கழறுதிரோபாவத்திற்காணுறுதுன்பாமே ... *

(இ-ள்)சடத்தில் சிருட்டியும் திதியும் சங்காரமும் நடக்குந் தக்கவுயிரினிடத்துத் திரோபவமும் அனுக்கிரகமும் பொருந்தும் திடம்பொருந்திய சுகதுன்பங்கள் அருத்துஞ் செய்கையால் அந்தத்திதியானது இதத்திதியென்றும், அகிதத்திதியென்றும், இரண்டுவகையாம் இவ்வாறுதிதியிரண்டென்று சொல்லப்பட்டமுறைமையால் கிருத்தியமென்பது ஆறாகும்,

வினைகளாக்கல்-முதன் மூவர்க்கேவல்செய்தல்-என-
ஆறு. (உ௬)

சகலமேசிருட்டிபதாங்கேவலஞ்சங்காரந்... ...*
தகுசுத்தந்திதியாகுஞ்சாக்கிரஞ்சொப்பனத்தோ
டிகல்சுழுத்தி துரியந்துரியாதீதமிவற்று.........*
ளியும்புமுதற்சாக்கிரமேசிருட்டியதுவர்கும் *
புகல்கனவுதிதியாகுஞ்சுழுத்திமுதல்மூன்றும்...*
போக்கிடுசங்காரமதாம்பொருநனவிற்கனவிற்இ
பகர்சுகதுன்புண்டாகுஞ்சுழுத்திமுதன்மூன்றிற்-*
படிநிடராமிவைபாண்டிற்சகடெனவேவருமால்

இது - ஐந்தவஸ்தைகளிலும் முத்தொழிலு
ண்டென்று முறைமை கூறுகின்றது.

(இ-ள்.) சகலாவஸ்தையே சிருட்டியாகுங் கேவ
லாவஸ்தை சங்காரமாம் - சுத்தாவஸ்தைதிதியாகுஞ்
சாக்கிரஞ் சொப்பனஞ்சுழுத்தி துரியந்துரியாதீ
தம் என்னு மிவற்றுள் முதலிற்சொல்லிய சாக்கிரா
வஸ்தையே சிருட்டியாம்- சொல்லுகின்ற சொப்ப
னாவஸ்தை திதியாகுஞ் சுழுத்தி துரியந் துரியாதீத
மென்னும் மூன்றும் நீங்குகின்றசங்காரமாம்- சாக்
கிராவஸ்தையிலுஞ் சொப்பனவஸ்தையிலுஞ் சுக
முந்துக்கமும் உண்டாகும்-சுழுத்திமுதலாகிய மூ

ன்றவஸ்தையிலுந் துக்கமே உண்டாகும்-இவைகள் வண்டி உருளைப்போலமாறிமாறிவரும்-என்க(௨௮)

நனவினிலைம்புல னுகரும்பொழுதைந்திந்திரியத்தும்
தவினிடுமைந்தொழில்களும்வந் துறுமனையிற்
குணைப்பின் - முனமுறையோரிந்திரியத்தைப்பொரு
ந்தியதேசி நட்டி- முதிர்விடயமருந் துவதேத்திதி
யாகும்விஷயந்- தனையறியுந்தனைவேறுச்சாற்றவொ
ண்ணாதழுந்தல் - சங்காரமிதைருசிப்பித்திடுதறி
ரோபாவ - மினிதினிதன் றெனவுணர்தலனுக்கிரக
மாகு - மிம்முறையுட்கரணத்துமியங்குறுமைந்
தொழிலே.............................. *

இது-உட்கரணங்களினிடத்தும் ஐந்தொழிலுள தென்று கூறுகின்றது.

(இ-ள்.)சாக்கிராவஸ்தையில் ஐம்புலன்களை உண்ணும்பொழுது பஞ்சேந்திரியங்களிலுஞ்சொல்லுகின்ற பஞ்சகிர்த்தியங்களும் வந்து பொருந்தும்- அவைகளை இங்குச் சொல்லுமிடத்தில் முன்னைக் சொல்லுகின்ற இந்திரியத்தைப்பொருந்தியதே சிருட்டி - மிகுந்த விஷயத்தை அருந்துவதே திதி - அவ்விஷயத்தை யறியுந்தன்னை வேறுகட்பிரித்துச் சொல்லவொண்ணாமல் அதிலழுந்துதலே சங்காரம்- இவ்விஷயங்களை ருசிப்பித்திடுதலே தி

ரோபவம் - இனிதன்று இது இனிதன்றுளனவுண
ர்தலே அனுக்கிரகம்-இம்முறையாக உட்கரணத்து
ம் ஐந்தொழிலும் நடக்கும்—என்க. (௨௮)

ஒருபொருளை நினைந்தெழுதல் சிருட்டியதுதனைபங்
குனிமகிழ்த்திதியதனைமறந்திடல்சங்கார..... *
மருவிப்பின்மயங்குதலேதிரோபாவம்பின்னர்...*
மற்றதனைத்தெளிந்தறிதலனுக்கிரகமாகும்... *
கருவிகளொவ்வொன்றிலுயிர் கலந்துறுபோதெல்
லாம்-காரணனைந்தொழிலுளமுன்கழறுமுறைகா
ணில்- விரவுகருவியின்மூன்றுமுயிரினிடத்திரண்டு
மேவுறு ஐந்தொழில்களுமுன்மெய்க்குயிர்க்
கோதியல்போல்..............................*

இது-சாக்கிராவத்தையில் பஞ்சகிருத்திய மு
னைடென்னு முறைமை கூறுகின்றது.

(இ-ள்.) ஏதாவதொருபொருளை நினைந்து ம
னம் எழுதல் சிருஷ்டி- அதனை நினைத்து மகிழ்ச்சி
யடைகுதல் திதி-அந்தப்பொருளை மறந்திடுதல் ச
ங்காரம்- அந்தப்பொரு ளின்னதென்று ஞாபகத்
தில் வராமல் மயங்குதல் திரோபவம். பின்பு அந்த
ப்பொருளைத் தெளிந்தறிகுதல் அனுக்கிரகமாம்
இவ்வாறு ஒவ்வொரு கருவிகளில் உயிரானது கல
ந்திருக்கும் போதெல்லாம் பரமசிவனுடைய பஞ்

ச கிருத்தியங்களுமுள முன்சொல்லிய முறைமை யை அறியுமிடத்தில்கரணங்களினிடத்தில் மூன்றும் உயிரினிடத்தி லிரண்டுமாகப் பொருந்தும் எவ்வா றென்னில் முன்னம்பஞ்ச கிர்த்தியங்களும் உடலு க்கும்உயிருக்குஞ் சொல்லியதுபோல- என்றறிக.( )

நாலிருபத்தொருநான்கைநண்ணிலக்கவிதமா ...*
நவிலுடலிற்றொழிலிறைவன் புரிவது தூலமதாத்
தூலவுடலவத்தைகளிற்கருவிகளொவ்வொன்றிற் *
றொழிலபுரிதல்சூக்குமமா நீக்கமறநின்றே ...*
ஏலுமிவ்வுட லுயிரோர்கருவியினிற்பிறந்து மிரு
ந்து,மிறந்துங்கணத்திற்சுழலுமிவ்வாறளவில் *
காலமவற்றுற்றிடமோகண்டதலாலந்தக்... .....*
கடவுளடிசேர்சுத்தங்கண்டதிலவ்வுயிரோ ... ...*

இது - தூலசூக்கும பஞ்சகிருத்தியங்களைச் சொல்லுகின்றது.

(இ-ள்.) எண்பத்து நான்கு லக்ஷபேதயோனி களாகச் சொல்லப்படுகிற உடல்களினிடத்தில் பர மசிவம் பஞ்சகிருத்தியங்கள்செய்வது தூலமாம் அத் தூலவுடலின் அவத்தைகளில் கருவிக ளொவ்வொ ன்றில் பஞ்சகிருத்தியஞ் செய்வது சூக்குமமாம் பொருந்திய இவ்வுடலுயிரானது நீக்கமில்லாமலி ருந்து ஒவ்வொரு கருவியிற் பிறந்தும் இருந்தும்

ந்தும் க்ஷணப் பொழுதில் சுழன்று கொண்டி
கும் இவ்வாறு அளவில்லாதகாலம் அந்தக்க
ருவிகளிற் பொருந்தித் துன்பத்தைக் கண்ட
தேயல்லாமல் அந்தப் பரமசிவத்தின் திருவடிக
ளிற் சேரும்படியான சுத்தநிலையை அந்த உயிர்
கண்டதில்லை—என்க. (௬௰)

இறைவனடிசேர்சுத்தமெங்ஙனென்னிலதுதா ...*
னியம்புறுகாரணபஞ்சகிருத்தியத்தாலறியு ...*
முறைமையதாமிஃதுமினிமொழிகுதுநாமுன்னர்
மொழிந்தனகேட் டறிவதுபோலறிவதுவன்றித
னை.நெறிகொள்சமாதியினிலிருந்தறிவதுவாமறிந்தா
னேர் படுநற்சுத்தமிதுநிகழ்ந்துறவே விளங்கி *
லறிதரலாந்திருவடியுமானந்தப்பேறு..........*
மத்தனுன்முன்னுறுதுயர்களியாவுமகன்றிடுமே*

இது-பரமசிவத்தின் திருவடியைச் சேரும்
படியான சுத்தநிலை யின்னதென்று உணர்த்து கி
ன்றது.

(இ-ள்.) பரமசிவத்தின் திருவடியைச் சேரு
ம்படியான சுத்தநிலை யெவ்வாறென்னில் அது தா
ன் காரணபஞ்சகிருத்தியத்தால் அறியு முறைமை
யினை யுடையதாம்-இந்தமுறைமையினையுமிப்போ
தே சொல்லுகிறோம்- ஆனால் நாமுன்பு சொன்ன

துகளைக் கேட்டறிந்து கொண்டதுபோல அறிவ தல்ல மற்றெவ்வாறறிவ தென்னில் இது முறைமை யினையுடைய சமாதியிலிருந்து அறியத்தக்கதாம் அவ்வாறறிந்தால் நல்ல சுத்தநிலை பொருந்தும் இ ந்தச்சுத்தநிலை கிரமமாக நடந்து விளங்குமானல் பரமசிவத்தின் திருவடியும் ஆனந்தப்பேறும்தெ ரிதலாம் அதனுல் முன்பொருந்திய துயரங்களெ ல்லாம் நீங்கிவிடும்—என்க. (௬க)

அறைந்தசமாதியினிலிருந்தறிவதெவ்வாறென்னி *
லறுவகையாம்பயனின்முயற்சிகளை விடுத்துடன்
மேற், செறிந்திடுபோகங்களின் மேற்பற்றுகளோர்
சற்றுஞ், சேராமற்கைவிட்டோ ரேகாந்தங்கைக்
கொண், டுறைந்தவிடத்தினிலொன்றைச் சாராமற்
செவ்வே, யுடல்வளையாமற்றேகக்கொன்றுசுகாத
னமுற், றிறந்திடுகாலநிகழ்காலமெதிர்காலத்தி *
லெய்துபயன்கருதாதேகாக்கிரசித்தமதாய் ...*

இது-சமாதியிலிருந்து அறியுமாறு கூறுகின் றது.

(இ-ள்.) மேற்கூறிய சமாதியிலிருந்து அறி வது எவ்வாறென்னில் ஆறுவகையாகிய பயனில்லா த தொழில்களைவிட்டு இந்தத் தேகத்தின் மேலும் பொருந்திய போகங்களின் மேலுமுள்ள பற்றுக

ஒன்றுஞ் சேராமல் கைவிட்டுத்தனியாகிய ஏகா
ந்தங் கைக்கொண்டு பொருந்திய இடத்தில் ஒன்
றிலுஞ் சாராமலும் உடலானது வளையாமலும்
சரீரத்துக்குப் பொருந்திய சுகாசனத்தைச் செவ்
வையாகப்பொருந்தி இறந்தகாலத்திலும் நிகழ்கால
த்திலும் எதிர்காலத்திலும் வருகிறபயனைக் கருதாம
லும் ஏகாக்கிரசித்தமாய்-என்க. (௫௨)

பிருதிவித்துவமுதலா நாதமதிறுகப்...... ......*
பேசியநாலொன்பானுளோரொருமாகருவிக் *
குருவமுடன்றரிசனசுத்தியுமிவையென்றுன்னி *
யொவ்வொன்றுநியதிகளை ந்துயர்நாதமேறிக் *
கருவிகளையென்றுமேல்கண்டதனுற்சடமாங்......*
கண்டிவற்றைக்கழன்றவனுன் காட்டியதுகடவுட்
டிருவருளென்றறிந்தருளைச்செறிந்திடுதியிதனுட்*
சிவனைந்தொழினடக்குஞ்செய்தியதுகேளே.

இ-து-தத்துவங்கள் சடமென்றறிந்து கழன்று
தேகியைக்காட்டியது திருவருளென்னு முறைமை
கூறுகின்றது.

(இ-ள்.) பிருதிவிதத்துவமுதல் நாததத்துவமீறு
கச்சொல்லப்பட்ட முப்பத்தாறு தத்துவங்களுக்கு
ள் ஒவ்வொருதத்துவத்துக்கும் உருவமுந்தரிசனமு

ம் சுத்தியும் இவைகளென்று அறிந்து அவைகளை
யொவ்வொன்றாக நியதிசெய்து உயர்ந்த நாதசத்
துவத்திலேறி இந்தக்கருவிகளென்னாற் காணப்ப
ட்டதனால் அவைகள் சடமாம் இவைகளைக்கண்டு
கழன்றவனான் இவ்வாறு நான் காணும்படிகாட்டி
யது பரமசிவத்தின் திருவருளென்றறிந்து அவ்வ
ருளைப்பொருந்தக்கடவை- அதனில் பரமசிவனது
பஞ்சகிருத்திய நடக்குமுறைமையைக் கேட்பாயாக
என்க. (௩௩)

கருவிகளொவ்வொன்றாகத் தோன்றுதலேசிருட்டி-
  கண்டதனினின்று தரிசித்தல்திதியதனை ... ...*
யொருவுதலேசங்கார மருண்மீதிற்பேரன் .....*
  புற்றெழுதல்சொற்றிரோபாவமதேயாகுந் ...*
திருவருளேகண்ணாகக்காண்பதநுக்கிரகந் ... ...*
  திருவருளிற்பிறிவறநீதினமுமிருந்திடுபோ ...*
தொருநினைவங்குற்றெழுதல்சகலமறைப்பாகி ...*
  யுறுவதுகேவலமாமிங்கிருவகையுமொருவ ...*

இ-து- தத்துவநியதியில் பஞ்சகிருத்திய நடக்கு
முறைமையைச் சொல்லுகின்றது.

(இ-ள். மேற்கூறிய தத்துவங்களொவ்வொன்றா
கக் காணப்படுவதே சிருஷ்டி அதனைக்கண்டு அதி
ல்நின்று தரிசித்தலே - திதி, அதனை நீங்குதலே சங்

காரம் - திருவருளினிடத்தில் பேரன்பு பொருந்தி மேலெழுவது திரோபவம் - அந்தத்திருவருளேக ண்ணாகக்காண்பது அனுக்கிரகம் அந்தத்திருவரு ளிற்பிறிவற நீதிணமு மிருந்திடும்போது ஒருநினை வு அங்குப் பொருந்தியுண்டாகுதல் சகலம் அந்நி னைப்புமறைப்பாகியுறுவது கேவலம் இங்குக்கூறப் பட்ட இவ்விருவகையும் நீங்கும்படி-என்க. (௩௪)

ஒருறுதிசொல்லுதுநீகேட்டிநினைவெழுந்தா ... *
லுறுநினைவின்வயமாவையுற்றபினர்த்தெளிந்து,
சீருருவினிற்பையிதில்நின்றுலந்நினைவுன் ........ *
செங்கைவயமாமிவணஞ்செறிந்திடும்போது *
சேருநின்வெழுந்ததனின்வயமாகுமதனைத் ...... *
திரோபாவமென்றறிதிதிருவருளேச்சென்று *
கார்தலனுக்கிரகமெனத்தெளிதியருடனனைத் ... *
தான்வேண்டிற்சின்னுளிற்சகலமறுந்தானே ... *

இ-து-மேற்கூறிய சகல கேவலங்கள் நீங்கும் உ பாயங்கூறுகின்றது.

(இ-ள். ஒரு உறுதிசொல்லுகிறோம்அதனை நீகே ட்கக்கட்வை திருவருளில் நிற்கும்போது நினைவு ண்டாகுமாகுல் நீ அந்நினைவின்வசமா குவை அவ் வாறு அதன்வசமானபின்பு தெளிந்து சீர்பொரு ந்திய திருவருளி னிற்பை இதில் நின்றால் அந்

தநினைவு உன்கைவசமாகும் - இவ்வர்திருக்கும்போ
து உண்டாகிற நினைவானது அந்த அருளின் வசு
மாகும்-அதனைத் திரோபவமென்று அறியக்கடவை
அந்தநினைவானது திருவருளைச் சென்று சேர்த
லே அனுக்கிரகமென்று தெரிந்துகொள் அந்தத்தி
ருவருளினை விரும்பினால் சிலநாளில் சகலாவத்தை
நீங்கிவிடும்-என்க. (௩௫)

சகலமறிற்கேவலந்தான்வந்துவந்துதாக்குந் ...... *
தகைமைத்தாமெங்ஙனெனிற்றண்மதியைமேக *
மிகலொடுவந்தடிக்கடிமூடுதல்போலவிதுமுன் [ம்
னிருஞ்சகலத்தொடுகலந்துவருந்தகைமைத்தாகு
புகரில்சமாதியினிலுடல்கற்றூணைப்போலப் ... *
பொற்பின்வளையாதுற்றப்பித்திகையிற்சாயா *
திகலறுபேரருளாமேலகண்டசனைத்துக்க ....... *
விசைந்திடுகேவலமுமறுமிருவகையுமறவே. ... *

இ-து- சகலம் நீங்கினவிடத்தில் கேவலபேவிடு
மென்றும் சமாதிநிலையில் நின்றால் அதுவும் நீங்கு
மென்றுங் கூறுகின்றது.

(இ-ள்.) சகலம் நீங்கினவிடத்தில் கேவலமானது
வந்து வந்து தாக்குமுறைமையுடையதாம்-அது எ
வ்வாறென்னில்குளிர்ச்சிபொருந்திய சந்திரனை மே
கமானது வன்மையுடன்வந்து அடிக்கடி மூடுவது

போல (எனவறிக்)இந்தக்கேவலமானது முன்சொல்லிய சகலத்தோடுஞ்சேர்ந்து பொருந்திவருந் தகைமையுடையதாகும்-அது அத்தகைமையினையுடையதாயிருந்தாலும் சொல்லுகின்ற சமாதியிலுடலானது அசையாமலும் சுவரிற்சார்ர்மலும் பொலிவுடனே. கற்றூணைப்போலிருந்து குற்றமற்ற பெரியதிருவருளாலேபார்த்துக் கேவலமேலிடாமல் தடுத்தால் பொருந்திய அக்கேவலமும் அறும்-இவ்வாறு இவ்விருவகையும் நீங்கினால்—என்க. (௫௬)

மாயையுங்கன்மமுமந்தச்சகலத்தோடொழியும்.. *
வழுத்திடுகேவலத்துடனணவமாயுமிவைதாம் *
ஆயவசுத்தம்மிவையகன்றதுவேசுத்த. —... [ந்
மத்தனையுளாத்திடின்பலவாய்க்கதிர்வீழ்காலம்போ
றாயவருணோதயப்போற் றோன்றுமிதைப் பெரி
யார், துன்னுமிராப்பகலற்றவிடமென்றுமிறப்
பு, மேயநினைப்புமில்லாவிடமென்றுமிறப்பு. *
மிகுபிறப்புமில்லாதவிடமென்றும்புகல்வார் *

இது-ஆணவ கன்மமாயைகளாகிய அசுத்தம்நீங்கினவிடத்தில் சுத்தந்தோன்றுமென்னு முறைமை கூறுகின்றது.

(இ-ள்.) மாயையுங் கன்மமும் அந்தச்சகலத்துட னீங்கிவிடும் அது நீங்கவே மேலுண்டாகுமென்

று கேவலத்துடன் ஆணவம் நீங்கிவிடும் மாயை கன்மம் ஆணவம் என்ற இம்மூன்றும் அசுத்தம் இவைகள் நீங்கினவிடமே சுத்தம் அதைச் சொல்லுமிடத்தில் அஸ்தமனகிரியிலிடத்தில் சூரியன்விழும்படியான மாலைக்காலம் போலவும் பரிசுத்தமான அருணோதயம்போலவும் தோன்றும்- இவ்வாறுதோன்றுவதை இராப்பகல் அற்ற இடமென்றும் நினைப்பு மறப்புமில்லாத இடமென்றும் பிறப்பும் இறப்பு மில்லாத இடமென்றும் பெரியோர்கள்சொல்லுவார்கள் —என்க. (௫௭)

சுத்தத்தைப்பெற்றதனிலுன்போதஞ்சிறிதுந் ...*
தோன்றாமனின்றிடவேதோன்றும்பேருடா *
னெத்திக்கும்பலகோடிசூரியரோருழியி........*
னெய்தியவாறையமறும்பேரொளியதாகித் ...*
தித்திக்குமமுதகடலுலகமெலாம்பரந்த..........*
செய்தியினைசடசித்துக்குட்புறனுந்நிறைவாய்*
வர்த்திக்குநிர்வபமாய்நிட்களமாய்நிமல..... .. ...*
வடிவாகிக்கேடில்லாவான்பொருளாயெங்கும் *

இது-திருவருள்நிற்கும்நிலைமைகூறுகின்றது.

(இ-ள்.) மேற்கூறிய சுத்தத்தைப்பெற்ற உன் போதஞ் சிறிதுந்தோன்றாமல் அதில்நின்றால் திருவருளானது தோன்றும் அவ்வாறுதோன்றியதிருவரு

ளானது எல்லாத் திக்குகளிலும் பலகோடி சூரியர்கள் ஒரோயிடமாகத் தோன்றுமுறைமைபோல சந்தேக மில்லாத ஒரு பேரொளியாய் அமிர்த கடலானது உலகமெங்கும் பரந்த தன்மைபோலச் சடசித்துகளுக்கு உட்புறஞகிப் பூரணமாயும் நிர்வயமாகியும் நிட்களமாகியும். நிருமல சொரூபமாகியும் அழிவில்லாத சிறந்தபொருளாகியும் எங்கெங்கும் விர்த்தியாகும்—என்க. (ருஅ)

இப்படிதோன்றியவருளினுன் போதந்தோன்று *
மெங்ஙனெனின்முனர்மாயா போதத்தைக் கொ
ண்டே,செப்பரியபிரவஞ்சமறிவதுபோலிந்தத் *
திருவருட்போதத்தாலேயுவ்வருளைச்சிவத்தைத்*
தப்பரியநில்போதமெதிரிட்டுக்காணுந்தற்பரனே *
யப்போதந்தனைநீணையவேண்டும் ........ *
மப்பொருளைப்பகுத்தகனிநிற்குநிலைக்குவளைம *
யலர்விழிச்சைக்கதிலைப்பிறிபடநோக்குதலே.

இது-தற்போதம் நீங்கவேண்டுமென்னுமுறைமைகூறுகின்றது.

(இ-ள்) இவ்வாறுதோன்றிய திருவருளில் உன்போதந் தோன்றும் எவ்வாறென்னில் முன்னம் மாயாபோதத்தைக் கொண்டு சொல்லுதற்கரிய பிரவஞ்சத்தை அறிவதுபோல இந்தத் திருவருட் போதத்தால் அந்தத் திருவருளையும் சிவத்தையும்

நீங்குதற்கரிய உன்போதம் எதிரிட்டுக்காணும் அப்
போதம்நீங்கிப் பரமசிவத்தைச் சேரவேண்டும் அ
ந்தப்பொருளைப்பகுத்தறிந்து அதில்நீ நிற்கும் மு
றைமைக்குவமை பரந்த கண்ணொளியானது கிரணத்
தையும் சூரியனையும் பிரிவுபட நோக்குதல்போலா
ம்—என்க. (௫௰)

உன்போதமறவிரகுண்டுரைசெய்துங்கேணீ [கா
யுறுவிழிக்கதிரைப்புடைபெயர்ந்து நோ
தன்போடக்கதிரொதிரங்கசைவறநின்றிடவே... [ல
யதுவிதுவென்றிரண்டறவேதோன்றுமதுபோ
நின்போதமருள்சிவநாமென்றுபகுக்காது..... *
நிகழ்சிவனோர்நின்றிடவொன்றிரண்டாகாவயிக்க,
மின்போடெய்துறுமிதனைக்கண்டுகொணீகண்டி—
யிதனிலமும்பரின்பமேழ்கடலிற்பெரிதே *

இ-து- தற்போதம் நீங்குதற் குபாயங்கூறியது

(இ-ள். உன்போதம்நீங்குதற்கு ஒருபாயமுண்டு
சொல்லுகிறேன்கேள் பொருந்திய கண்ணொ
கிரணத்தையும் சூரியனையும் பிரித்துப்பாராமல்
ன்புடன் அந்தச்சூரியனுக்கெதிரில் அசைவற நி
ன்றால் கண்ணொளியென்றும் சூரியனொளியென்று
ம் சொல்லுகிற இவ்விரண்டு பேதங்களுமில்லாப
தோன்றும் அதுபோல நின்போதமானது அரு

ளென்றும் சிவமென்றும் நானென்றும் பிரிக்காமல் பரிபூரணமாகிய பரமசிவத்துக்குநேராக நீநிற்கில்லொன்றென்றும் இரண்டென்றும் ஆகாத அயிக்கம் பேரின்பத்துடன் பொருந்தும் நீயிதனை அறிந்துகொள்ளக்கடவை இவ்வாறு கண்டால் பொருந்தும் பேரின்பமானது எழுகடலினும் பெரிதாம் — என்க. (சய)

முன்னாறாறுங்கருவிதுகள்பசுவினறிவெனவே ,...*
மொழிந்தவையுளொன்றேனுங்கண்டிலனீதென்
தன்னுமிருளுநிமதியின்சுடரிவைகள்கதிர்முன்
னொன்றாயசிவத்தின்முனர்த் தோன்றுதென்றறி
யுன்னலருஞ்சுகமதனிலுதித்ததெவ்வாறென்னி*
னுறுபெண்ணாண் கூடுமிடத்துற்றெழுமின்பே
போன்மன்னுயிராகியபெண்ணுஞ் சிவமென்னும்
மாணு- மணைந்திடும்போதெழுந்திடும்பேரான
ந்தவாரி..............................................*

இது-பேரின்பந் தோன்றுதற்கு மேற்கோள் கூறுகின்றது.

(இ-ள்.) முன்னம்பொருந்திய தத்துவங்களும் ஆணவமலமும் சீவ அறிவென்றுசொல்லியவற்றுள் நானொன்றாகிலுங்கண்டிலன் இதுஎன்னகுருவே, மரவகனே சொல்லக்கேள்பொருந்தியஇருள் நக்ஷத்

திரங்கள் சந்திரப்பிரகாசம் என்னும் இவைகள் சூ
ரியப்பிரகாசத்துக்கு முன்தோன்றாத முறைமை
போல அவைகள் சிவத்தின்முன் தோன்றாவென்ற
றிவாயாக-நினைத்தற்கரிய சுகமானது அச்சிவத்துட
ன் கலந்தபோதுஉண்டானதெவ்வாறென்னில்-பொ
ருந்திய பெண்ணும் ஆணுங்கூடியிடத்துண்டாகும்
சிற்றின்பம்போல அழிவில்லாத உயிராகிய பெண்
ணும் சிவமென்னும் ஆணும்கூடினபோது, பேரா
னந்தக்கடல்உண்டாகும்—என்க. (௪௩)

திருவடிசேர்விரகென்றுமுன்னுரைதந்தீரந்தத் ...*
திருவடியிங்கேதென்னிற்றிரோதையாருளென்னு*
மிருவகையுமிறைபாதமிவைகீழ்மேலேக்கி... ...*
யிருந்திடிங்கீழ்நோக்கியதாளஃதுறுமாருயிர்க்
கு-வருவினையாப்பாக்கிமலபரிபாகமாக்கு......*
மற்றதும்பேரானந்தவாரிதருமிவைகள்.........*
பொருவிலுயிர்ச்சிரசின்மிசைப்பிறிவற்றே தங்கும்
பொற்சபையினின்றநிலைதிட்டமதுகாணே ...*

இது- பரமசிவத்தின் திருவடித் தன்மை கூ
றுகின்றது.

(இ-ள்.) குருவேதிருவடிகளைச் சேரும் உபா
யமிதுவென்று முன்னம் உரைத்தருளினீர் அந்தத்
திருவடியென்பதிங்கேது வென்னில் மாணவகேள்.

திரோபவம் அனுக்கிரகமென்கிற அவ்விரண்டுமே பரமசிவத்தின் திருவடிகளாம் இவைகளில் ஒரு திருவடி கீழூன்றிநிற்கும் மற்றொருதிருவடியானது மேல்தூக்கினவண்ணமாக நிற்கும் கீழூன்றியதிருவடியானது நிலைபெற்ற அரியஉயிர்களுக்கு வருகிற நல்வினை தீவினையென்னும் இரண்டுவினைகளையுஞ் சமமாக்கி மலபரிபாகமுண்டாக்கும் தூக்கிய திருவடிபோவெனில் பேரானந்த வெள்ளத்தைக் கொடுத்தருளும்-இத்தன்மையுள்ள இரண்டுதிருவடிகளும் உயிர்களுடைய சிரசின்மேல் பிரிவறப்பொருந்திய கனகசபையில்நின்ற நிலையாம் இது உண்மையே—என்க. (சஉ)

இவ்வடியைச்சேர்ந்தவிடத்தைந்தொழிலேதென்னி
லிவை யருமாயையிலுதித்தாங்கருளி லுதித்ததுவே-செவ்வியநற்சிருட்டியதாஞ்சுகப்பேற்றதுதியாஞ்-சீவனிருட்போதமறல்சங்காரமாகு.........*
மவ்வியமாம்பிரவஞ்சநீத்தான் முதவதுவே... ... *
யானதிரோபாவமதாமாயவொருநான்குந் ... *
தவ்வலறவிளங்குதலிங்கனுக்கிரகமாகுந்...... ...*
தணப்பில்சுகாதீதத்திற்கிளவொன்றுதுறுமே

இ-து- திருவடிகளைச் சேர்ந்தவிடத்து நிகழும் பஞ்சகிருத்தியங்களைக் கூறுகின்றது.

[ச]

(இ-ள்.) இந்தத்திருவடிகளைச்சேர்ந்தவிடத் பஞ்சகிருத்தியங்களேதுவென்னில் கூடியமா யில் உதித்ததுபோலத் திருவருளில் உதித்த செய்விதான நல்லசிருட்டியாம்-பேரானந்தம் ண்டாவதே திதியாம்-சீவனுடைய ஆணவமலம் குதலே சங்காரமாம்-மாயையாகிய பிரபஞ்சந் ன்றுதலே திரோபாவமாம்- இவ்வாறாகிய இந் ன்கும் குற்றமறவிளங்குதலே அனுக்கிரகமாய் வில்லாத-சுகாதீதத்தில் சொல்லவொண்ணா திருக்கு ம்—என்க. (௩௫)

அளவறு நாட்பிறவியிடர்க்கடலலையிற்கிடந்த ... *
அடியேனைத்தூக்கியுமதருணடனங்காட்டி ... *
உளமகிழ்வுற்றறியாதயாவைகளுமுணர்த்தி ... ... *
யுயர்மவுனானந்தத்தண்கடலவைத்தீரடிகள் ... *
களவினனீதுக்கோர்கைம்மாறறிகிலேனுமது ... . *
கமலபதமெந்நாளும் அருளுடனேவாழி... ... *
வளனுறுநம்மருளடியார்நடைபுகலவேண்டும் ... *
வாரீசத்திருவாயான்மதுரநறைபோல...... ...

இ-து-ஆசாரியனை வியந்துகூறுதல்.

(இ-ள்.) குருவே - அளவற்றநாளாகத் துயரம் பொருந்திய பிறவியாகியசமுத்திரத்தின் அலையில்

அகப்பட்டுக்கிடந்த அடியேனை பேரருளினாலெடு த்துத் திருவுள்ளமகிழ்ந்து நானறியாதனவைகளாய்ப் பலவாறாகிய பஞ்சகிருத்தியங்கள் முதலானவற்றை யறிவித்து மேலானமவுனானந்தமென்னுந் தளிர்ச்சி பொருந்தியசமுத்திரத்தில் வைத்தருளினீர் இந்தப் பேருதவிக்குவஞ்சகனாகிய யான்செய்யத்தக்கபிரதி யுபகாரம் யாதொன்று மறிந்திலேன், தேவரீருடை ய திருவடிகள் எந்நாளும் வாழக்கடவனவாக - சிவ ஞானச்செல்வம்பொருந்திய தேவரீருடையதிருவரு ள்பெற்றுள்ள அடியார்களது ஒழுக்கத்தை, செந்தா மரைமலர்போன்ற திருவாக்கினால், மதுரமுள்ளதே ன்பொழிவதும்போல இனிஉரைத்தருளவேண்டும்— என்க. (௪௪)

பங்கமுறுமெய்ஞ்ஞானப்புதல்வாகேளடியார்... *
புன்னெறிபேதும்மறியார்நன்னெறியைத்தானே
யெங்குமுறுஞ்சிவமொன்றேகண்டிடுவர்காணு...*
வொண்ணரியபலவிதமாய்நண்ணுதுமாயைகளைத்
தங்கியபல்லுயிர்கட்குத் தண்ணளிமெய்புரிவார் ... *
தாய்போற்செய்போறனைக்கென்றுன்னார்சற்று,
மங்கியுழற்பவமுற்றும்வருமவர்போற்பிறனா....*
வருபகைவருறவெனவாடார்மகிழாரோ... ...*

இ-து-அடியார்கள் பெருமைகூறுகின்றது.

(இ-ள்.) பரிசுத்தம்பொருந்திய மெய்ஞ்ஞானபுத்திரனே-நீ கேள் அவ்வடியார்கள் கீழ்மையானநெறிகள் எவ்வளவுமறியார்கள் - நன்மார்க்கத்தையே எவ்விடத்தும் பொருந்தியிருப்பார்கள்—சிவமொன்றனைக் காண்பார்களேயன்றிப் பலபலவிதமாகப்பொருந்திய மாயைகளைக்காணார்கள்-தாயானவள் தானீன்றமகவுக்கு அருள்செய்வதுபோல நிலைபெற்றிராநின்ற எல்லா உயிர்கட்குந் தண்மையான அருளேசெய்வார்கள், நாளைக்காகுமென்று சிறிதுங்கருதார்கள்-இறந்துமுற்பிறப்பில் அடிக்கடிவருகின்றவர்போல பிறரைப்பகைவரொன்றாகருதி மனமேவாடார்கள்உற்றவினமொன்றுமனமகிழார்கள்-என்க. (சரு

ஆணவமேயாருயிர்கட்குட்பகையென்றறிவா... *
ரளவறுநாளுறமூடித் துயருறவைத்ததனாற் ... *
றுணுவெமைக்கேளா துதண்ணளியாலெடுத்துத். *
தனுவாதிதந்ததனைப்பரிபாகமாக்கி ... ... ... *
மாணுறமின்பந்தரலானக்கடவுடானே...... ... *
மன்னுறவாமென்றறிவாரன்னவனைத்தொழுவார்,
காணுயிர்தற்சுதந்தரமாய்ச்சுகதுன் பந்தருமோர்[ர்
காரணமின்மையி... தனைப்பொதுவாகக்காண்பா

இதுவுமது.

(இ-ள்.) அளவற்றநாள்பொருந்தி மறைத்துத்துன்பமுறவைத்ததனால் ஆணவமலமே உயிர்களுக்கு

உட்பகையென்று அறிவார்கள்-சிவமானது நம்மை வினவாமல் தண்ணளியால் அவ்வாணவ மலத்தினின்றெடுத்துத் தநுகரணபுவனபோகங்களைத் தந்தருளி அவ்வாணவமலத்தைப் பரிபாகமாக்கி மாட்சிமைபொருந்திய பேரின்பம் அருளிச்செய்வதினால் அந்தச்சிவமே நிலைபான உறவென்று அறிவார்கள்-அறிந்து அக்கடவுளையே தொழுவார்கள்-காணுகின்ற உயிர் தற் சுதந்தரமாகச் சுகதுக்கங்களைத்தருகின்ற காரணஞ் சிறிதுமில்லாமையால் அவ்வுயிரைப் பொதுவாகக்காண்பார்கள்—என்க. (௪௯)

ஊழ்வினையாலேபிறருக்குயர்நன்மைசெயினு ...*
மொருவர்தமக்குத்தீமையுறநன்மைசெயினுந்*
தாழ்வறுபேரருளாளன்றன்செயலாநினைவார் ... *
தம்பாலோர்தீமையுறிற்றம்மைவெறுத்திடுவார் *
காமுறுநெஞ்சினர்பிறருக்கொருநன்மைசெயினுங்
கருதயவர்தீதுதமக்குச்செயினுங்காண்பா-...*
ரோழ்கடவிற்சுகதுன்பமியாம்பிறரொன்றுன்னி ...*
யிவைமாறிச்செய்யுமிடத்தீசன்மேல்வைப்பார்*

இதுவுமது.

(இ-ள்.) ஊழ்வினையினால் ஒருவருக்கு மேன்மையாகிய நன்மையைத் தாங்கள் செய்தாலும், அல்லது மற்றொருவர் தங்களுக்குத் தீமையாவது நன்

மைபாவது செய்தாலும், தாழ்வில்லாத பேரருளாளனாகிய பரமசிவனது செயலென்று நினைவார்கள்- தம்மிடத்திலொரு தீமையிருக்குமானால் தங்களை வெறுத்துக்கொள்வார்கள். காமியத்தைப்பொருந்திய மனமுள்ளவர்கள் பிறருக்கு ஒரு நன்மையினைச்செய்தாலும் கருதுகின்ற அயலாரா யிருப்பவர்கள் தங்களுக்குத்தீதுசெய்தாலும் அர்த்தந்தப்படியே காண்பார்கள் - ஏழுசமுத்திரம்போல் பெரிதாகிய சுகமென்றும், துன்பமென்றும், நாமென்றும், பிறரொன்றும், பின்னமாகக்கருதி, இவைகளைமாறிச்செய்யுங்காலத்தில் பரமசிவத்தின்மேல் வைப்பார்கள்- என்க. மாறிச்செய்தலாவது-பிறர்தங்களுக்கு நன்மைசெய்தல்பிறர்களுக்குத்தாங்கள்தீமைசெய்தல்.()

முனையாதிசராசரமோர்முன்னிலையாலெழினு, மொழிந்தவையோர்முன்னிலைபாற் காக்கப்பட்டுறினும், வளைகடல்சூழுலகிலொருயிர்க்கோர் முன்னிலைபான், மலிநாசம்வந்துறினு நூல்பிறரான்மனத்தா,லுளைவுறுமாமயக்குறினுமவைகளினைத்தெளிதலுற்றிடினுமுன்னிலையைச்சற்றெனினுமுன்னோர். தலையவிழும்பூங்கொன்றைச்சங்கரனார்புரியுந்[வார். திண்ணளியைத்தொழிலென்றேயெண்ணிவியந்திடு

இதுவுமது.

(இ-ள்.) முனைமுதலாகிய சராசரங்கள் ஒருமுன்

னிலையினால் உண்டானாலும், அன்றியும் அவைகள் ஒருமுன்னிலையாற் காக்கப்பட்டிருந்தாலும், வளந்திராநின்ற சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்திலிருக்கும் ஒருயிருக்கு ஒருமுன்னிலையால் பொருந்திய அறிவு வந்தாலும், சாஸ்திரத்தினாலும், பிறராலும், மனத்தினாலும், வருந்தும்படியானமயக்கம் நேரிட்டாலும், அம்மூன்றினால் தெளிவைப்பொருந்தினாலும், ஒருமுன்னிலையைச் சிறிதுங்கருதார்கள் - இதழ்கள்மலர்ந்த கொன்றைப் பூமாலையணிந்த பரமசிவம் நடத்துகின்ற தட்பமுள்ள திருவருளால் நடக்கும் பஞ்சகிருத்தியமென்றே கருதி ஆனந்தம் அடைவார்கள்—என்க. (௪௮)

பருத்தியசத்தின்மயிர்மண்பாடாணாதிகடாம்..... *
பரன்சிருட்டியவனருளாற்பகாசிவன்சிருட்டி *
விரித்தபடங்கள்பளமட்கடஞ்சிகரிகோயில்......*
விளம்புமிவையாதிகளாமிவைபோலவுலக ... *
மருத்தியுடன்விளங்குறினுஞ்சீவர்கள்போன் மயங்
காரருள்விளையாட்டாநினைவராதலிற்புற்புதமா*
புருக்கொளினுஞ்சிருட்டிதிதிசங்காரமுளவென் *
றுன்னிடுவார்துன்னிடுவாருயர்சுகவாரியதாய் *

இதுவுமது.

(இ-ள்.) பருத்தி ஆட்டின்மயிர் மண்பாஷாணம் இவைமுதலானவைகள் பரமசிவத்தின் சிருட்டியா

ம்- அப்பரமசிவத்தின் திருவருளால் சீவசிருட்டி யாதென்னில் விரித்தஆடை, கம்பளம், மட்கடம், கோபுரம், கோயில், முதலானவைகளாம். இவை போல உலகமானது ஆசையுடன் விளங்குமாறுவும் இவர்கள் மற்றச் சீவர்கள்போலமயங்கார்கள் -திருவருள் விளையாட்டாகவே நினைப்பார்கள் நீர்க்குமிழிகளாய் உருவங்கொண்டாலும் அவற்றிலும்சிருட்டி திதி சங்காரம் உள்ளனவென்று கருதுவார்கள் ஆகலால்இவர்கள் ஆனந்தவெள்ளமயமாயிருப்பார்கள்—என்க. (௪௧)

காமமுறின்மோகமும்லோபமுந்தோன்றுமந்தக் ※
காமமறிலிரண்டுமறுங்காமமறுதலையி……※
லேமமிகுங்கோபமுறுமிகனின்மதவயிர….[ர்
மெழுமதனிலிவையறுமென்னிச்சைசிறைஞ்சாதா
யாமறிவிங்கிவ்வறிவிலெழுமின்பமேமமென் [ணர்
றெண்ணிடுவார்மண்ணவனியாமெப்போதென்றெண்
சேமநிதியிறைவனவனிறைவியவளதுதான் ..…※
சிற்சுகமென்றெண்ணிடுவார்நற்சுகபூரணரே ※

இதுவுமது.

(இ-ள்.) ஒருபொருளில் இச்சைவைத்தால் மோகமும் லோபமுமுண்டாகும்- அந்த இச்சை அத்

னால் அவ்விரண்டும் அறும் அந்தக்காமத்துக்குத்த
டைவந்தால்மயக்கமுள்ளகோபமுண்டாகும் இந்தக்
கோபத்தினிடத்தில் மகமும் வைராக்கியமு முண்
டாகும் - அந்தக்கோபம் நீங்கினால் அதிலுண்டான
இரண்டும் நீங்கும்என்றுகருதிவிருப்பும் வெறுப்பு
ம் அடையார்கள் நாம் அறிவு இவ்வறிவிலுண்டாகும்
பேரானந்தம் எம்முடைய தென்று கருதுவார்கள்
உலகத்தாரைப் போல் நாமென்றும், நம்முடைய
தென்றும் கருதார்கள் அவன் அவள் அது என்னு
ம் மூன்றில் அவன் என்பது சேமநிதிபோலாகிய
இறைவனென்றும், அவளென்பது இறைவியெ
ன்றும், அது என்பது சிற்சுகமென்றுங் கருது
வார்கள் அவர்களே நல்லசுகபூரணர்கள். (௫௰)

நெப்பிழுகாகியவாறேநிகழ்சுகபூரணமாய்......*
நிறைந்தவுடிவோர்வடிவாயெழுந்தருளிநாயேன்
பொய்பறநத்திருநடனஞ்ஞாலமுதன்மூன்றுப் *
புகன்றடிபேன்றனையின்பப்புணரியிலேவைத்தீர்.
செய்யநூமகருளடியார்நடையுமுணாத்திட்டீர்...*
சிறியேன்மேல்வைத்திடுபேரருணுணம்வாழி *
பையமறவென்முடிமேல்வைத்ததிருச்செந்தா...*
ளருள்வாழியடியர்குழாம்வாழிசகம்வாழி ... *
இ-அ-வாழ்த்துக்கூறுகின்றது.

(இ-ள்.) பாலிலிருந்து நெய்யுண்டாகுமுறைமை போலச் சுகபூரணமாய் நிறைந்த சொரூபமானது ஒருமானிடவடிவமாய் எழுந்தருளி நாயடியேன் அஞ்ஞானம் நீங்கும்படி தேவரீருடைய திருநாமம் தூலமாதி மூன்றுஞ் சொல்லி அடியேனை ஆனந்தவெள்ளத்தில் வைத்தருளினீர் - அதுவுமன்றி சுவாமிகளுடைய அடியார்களது செய்தியான ஒழுக்கத்தையும் உணர்த்தருளினீர்-இவ்வண்ணமாகச்சிறியேனிடத்தில் வைத்த திருவருள் எந்நாளும் வாழ்க-சந்தேகமற நாயேன்முடியில்வைத்தருளிய செந்தாமரைமலர்போன்ற திருவடிவாழ்க அருள்வாழ்க அடியார்திருக்கூட்டம் வாழ்க அன்றியுமிவ்வுலகமும்வாழ்க—என்க. நெய்யிழுதாகியவாறென்பதனை-விறகிற்றீயினற்பாலிற்படு நெய்போலென்பதனாலுணர்க -நெய் இழுது - என்பது-பரியாயப் பதம். (௫௧)

பஞ்சதிகாரவிளக்கமுற்றியது.

திருச்சிற்றம்பலம்.